வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-மலர்விழி

தேதி 25.12.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளை இந்தியா நடத்தும் போது ஒட்டு மொத்த உலகமும் நம் நாட்டை உற்று நோக்கும் என பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

பாரத ரத்னா அட்டல் பிகாரி வாஜ்பாயின் பிறந்த தினமான இன்று தேசிய நல்ஆளுமை தினமாக கொண்டாடப்படுகிறது.

முன்னாள் பிரதமர் வாஜ்பாயின் பிறந்த தினத்தை முன்னிட்டு புதுச்சேரியில் அவரது திருவுருவப் படத்திற்கு அரசு சார்பில் மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

புதுச்சேரியில் கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு அனைத்து தேவாலயங்களிலும் நடைபெற்ற சிறப்பு திருப்பலியில் திரளான கிறிஸ்துவர்கள் கலந்து கொண்டு பிராத்தனை செய்தனர்.

*பால புரஸ்கார்*

வீர சீறார் தினம் நாளை கொண்டாடப்படுவதை ஒட்டி, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, புதுடெல்லியில் நடைபெற உள்ள நிகழ்ச்சியில் பிரதான் மந்திரி ராஷ்டிரிய பால் புரஸ்கார் விருதை வழங்க உள்ளார். இந்த ஆண்டு வீரம், விளையாட்டு மற்றும் சமூக சேவை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சிறப்பான சாதனைகளை வெளிப்படுத்தி 18 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 20 குழந்தைகள் இந்த விருதுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் தெரிவித்துள்ளது. இதனைத் தொடர்ந்து விருதுபெற்ற குழந்தைகளுடன் பிரதமர் திரு நரேந்திர மோடி கலந்துரையாடுவார். மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திருமதி அன்னபூர்ணா தேவி கலந்து கொள்ள உள்ள

இந்த நிகழ்ச்சியின் போது நாட்டின் வளமான நாகரீகத்தையும், பாரம்பரியத்தையும், வீர உணர்வையும் வெளிப்படுத்தும் கலாச்சார நிகழ்வுகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

*பிரதமர்*

2030-ல் அகமதாபாத்தில் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளை இந்தியா நடத்தும் போது ஒட்டு மொத்த உலகமும் நம் நாட்டை உற்று நோக்கும் என பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். இன்று அவர் நாடாளுமன்ற தொகுதி விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர்-வீராங்கனைகளுக்கான பரிசளிப்பு விழாவில் காணொளி வாயிலாக உரையாற்றிய அவர் இவ்வாறு தெரிவித்தார். சன்சத்கேல் மகோத்சவ் எனப்படும் இந்த விளையாட்டுப் போட்டிகளின் மூலம் திறன்மிகு விளையாட்டு வீரர்களை உருவாக்கி வருவதாகவும் அவர் தெரிவித்தார். இளையோர் மேம்பாட்டின் மூலம் வலுவான இந்தியாவை கட்டமைக்க முடியும் எனவும் வளர்ச்சி அடைந்த இந்தியாவை உருவாக்க இளைஞர்களின் பங்களிப்பு இன்றியமையாது எனக் குறிப்பிட்டார்.2036-ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளை நடத்தும் வாய்ப்புக்காக இந்தியா முயற்சித்து வருவதாகவும் தெரிவித்த பிரதமர் இந்திய விளையாட்டு வீரர்களின் திறமையை மெருகூட்டி தேசிய அரங்கிற்கு கொண்டு வர வேண்டிய அவசியம் உள்ளது என்றும் நாடாளுமன்ற விளையாட்டு பெருவிழா இதில் பெரும் பங்கு வகிக்க முடியும் என பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

*அமித் ஷா*

முன்னாள் பிரதமர் அடல்பிகாரி வாஜ்பாயின் பிறந்த நாளை முன்னிட்டு மத்திய பிரதேச மாநிலம் குவாலியரில் இன்று நடைபெற்ற மத்திய பிரதேச வளர்ச்சி உச்சி மாநாட்டில் மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு அமித் ஷா கலந்து கொண்டு உரையாற்றுகையில் அம்மாநில அரசின் வளர்ச்சிக்கான முயற்சிகளையும், நிர்வாக செயல்பாடுகளையும் வெகுவாக பாராட்டினார். இந்த நிகழ்வின் போது அம்மாநிலத்தில் 2 லட்சம் கோடி ரூபாய்க்கும் அதிகமான வளர்ச்சி திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டு தொடக்கி வைக்கப்பட்டன.

மேலும் அம்மாநிலத்தில் உள்ள தொழில் துறை நிறுவனங்களுக்கு 725 கோடி ரூபாய் ஊக்கத் தொகையை நேரடி பணப்பரிமாற்றம் மூலம் மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா விடுவித்தார்.

நல்லாட்சி தினம்

நல்லாட்சி என்பது ஒரு கற்பனையான லட்சியம் அல்ல என்றும் மாறாக, அது வெளிப்படைத்தன்மை, குடிமக்களை மையப்படுத்திய சேவையை அடிப்படையாகக் கொண்ட ஒரு அத்தியாவசிய நிர்வாகப் பொறுப்பு என மத்திய பணியாளர், பொது குறை தீர்ப்பு மற்றும் ஓய்வூதிய துறை இணை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறி உள்ளார். இதுகுறித்த கூடுதல் தகவல்கள்..............

(வாய்ஸ்)

ஒவ்வொரு வருடமும். டிசம்பர் மாதம் 25-ஆம் தேதி முன்னாள் பாரத பிரதமர் அட்டல் பிகாரி வாஜ்பாயின் பிறந்த தினத்தில் நல்லாட்சி தினம் கொண்டாடப்படுவது வழக்கம். அந்த வகையில் நல்லாட்சி தினத்தை முன்னிட்டு புதுடெல்லியில் நடைபெற்ற நல்லாட்சி நடைமுறைகள் குறித்த தேசிய பயிலரங்கில் சிறப்பு விருந்தினராக மத்திய பணியாளர் துறை இணை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். அப்போது அவர் கூறுகையில் அமைச்சகங்கள் மற்றும் துறைகள் முழுவதும் மேற்கொள்ளப்பட்ட கூட்டு முயற்சியினால் நிர்வாகத் திறனை வலுப்படுத்தி சமூக நல விளைவுகளை மேம்படுத்தி உள்ளதாக தெரிவித்தார். இந்த முன் முயற்சிகள் முக்கிய நிர்வாக செயல்முறைகளை வலுப்படுத்துவதையும், வேகமாக மாறி வரும் நிர்வாக சூழலின் சவால்களை எதிர்கொள்ள அரசு ஊழியர்களை தயார் படுத்துவதையும் நோக்கமாக கொண்டுள்ளன என அவர் குறிப்பிட்டார். பொது வாழ்வில் நேர்மை என்ற கருத்தை முன்னிறுத்தி மக்கள் நலன் சார்ந்த நிர்வாகத்திற்கு அடித்தளமிட்ட முன்னாள் பாரத பிரதமர் அட்டல் பிகாரி வாஜ்பாயின் பிறந்த தினத்தில் இந்த தினம் கொண்டாடப்படுவதால் முக்கியத் துவம் வாய்ந்ததாக கருதப்படுவதாக அவர் புகழாரம் சூட்டினார். முன்னதாக இந்த நிகழ்வின் போது மத்திய அரசு முன்னாள் ராணுவ வீரர்களுக்கான இடஒதுக்கீடு குறித்த வழிகாட்டுதலின் தொகுப்பு

செயற்கை நுண்ணறிவ அடிப்படையிலான ஆட்சேர்ப்பு விதிகள் உருவாக்கும் கருவி, கர்மயோகி டிஜிட்டல் கற்றல் ஆய்வகம் 2.0 உள்ளிட்ட 5 முக்கிய முன் முயற்சிகளை மத்திய இணை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தொடக்கி வைத்தார்.

*மன்கி பாத்*

பிரதமர் திரு நரேந்திர மோடியின் 129 ஆவது மன்-கீ-பாத் எனும் மனதின் குரல் நிகழ்ச்சி வரும் 28 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷன் தொலைக்காட்சியின் அனைத்து அலைவரிசைகளிலும் ஒலிபரப்பாக உள்ளது. இந்நிகழ்ச்சியில் இடம் பெற வேண்டிய கருத்துக்களை பொதுமக்கள் நமோ செயலி, மை-கவ் இணையதளம் மற்றும் 1800 11 7800 என்ற கட்டணமில்லா தொலைபேசி வாயிலாக நாளை 26 ஆம் தேதி வரை தெரிவிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

*குடியரசு துணைத் தலைவர்*

திருச்சி, சென்னை. தேசிய நெடுஞ்சாலையில் கடலூர் மாவட்டம் தொழுதூர் அருகே நேற்று இரவு திருச்சியில் இருந்து சென்னை நோக்கி சென்று கொண்டிருந்த அரசு விரைவுப் பேருந்தின் டயர் வெடித்து கட்டுப்பாட்டை இழந்து எதிர் திசையில் வந்து கொண்டிருந்த 2 கார்கள் மீது மோதிய விபத்தில் 9 பேர் உயிர் இழந்தனர். இந்த துயரச் சம்பவம் குறித்து குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் இரங்கல் தெரிவித்துள்ளார். இதுகுறித்து சமூக ஊடகப் பதிவில் விபத்தில் தங்கள் அன்புக்குரியவர்களை இழந்தவர்களுக்கு மன உறுதியும், தைரியமும் கிடைக்க வேண்டுமென்றும், காயம் அடைந்தவர்கள் விரைவில் குணமடைய வேண்டும் என தாம் பிராத்திப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

*வாஜ்பாய்*

முன்னாள் பாரத பிரதமர், பாரத ரத்னா அட்டல் பிகாரி வாஜ்பாயின் 101-ஆவது பிறந்த நாள் நல்ஆளுமை தினமாக இன்று கொண்டாடப்படுகிறது. இந்நாளை ஒட்டி புதுடெல்லியில் உள்ள அவரது நினைவிடத்தில் குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி, மத்திய அமைச்சர்கள் திரு ஜே பி நட்டா, திருமதி நிர்மலா சீதாராமன் உள்ளிட்டோர் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். நாடாளுமன்ற

வளாகத்தில் உள்ள அவரது திருவுருவப் படத்திற்கு திரு ஓம் பிர்லா உள்ளிட்டோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர். இதேபோல் புதுச்சேரி கடற்கரைச் சாலையில் அமைந்துள்ள நகராட்சி கட்டிட வளாகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவுப் படத்திற்கு துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு ரங்கசாமி, சட்டப்பேரவைத் தலைவர் திரு செல்வம், அமைச்சர்கள் திரு நமச்சிவாயம், திரு லட்சுமி நாராயணன், அரசுக் கொறடாக்கள் திரு ஏ கே டி ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு கல்யாணசுந்தரம், திரு பாஸ்கர் என்கிற தட்சிணாமூர்த்தி, திரு சாய் ஜே சரவணன் குமார் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

*கிறிஸ்துமஸ்-1 (6)*

ஏசு பிரான் அவதரித்த கிறிஸ்துமஸ் பண்டிகை இன்று உலகம் முழுவதும் உள்ள கிறஸ்துவர்களால் கோலாகலமாக கொண்டாடப்படுகிறது. புதுச்சேரியில் உள்ள அனைத்து தேவாலயங்களிலும் கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு நடைபெற்ற நள்ளிரவு சிறப்பு பிராத்தனையில் திரளான கிறிஸ்துவர்கள் கலந்து கொண்டு பிராத்தனையில் ஈடுபட்டனர். இதுகுறித்த மேலும் சில தகவல்கள்...................

(வாய்ஸ்)

புதுச்சேரியில் கிறிஸ்துமஸ் பண்டிகை இன்று வழக்கமான உற்சாகத்துடன் சிறப்பாக கொண்டாடப்பட்டது. மிஷன் வீதியில் உள்ள நூற்றாண்டு பழமையான பிரசித்திப் பெற்ற புனித ஜென்மராக்கினி அன்னை பேராலயத்தில் நள்ளிரவு சிறப்பு பிராத்தனை நடைபெற்றது. புதுச்சேரி-கடலூர் உயர் மறை மாவட்ட பேராயர் பிரான்சிஸ் கலிஸ்ட் தலைமையில் சிறப்பு திருப்பலி நடைபெற்றது. இதில் ஏராளமான கிறிஸ்துவர்கள் கலந்து கொண்டு பிராத்தனையில் ஈடுபட்டனர். ஏசு கிறிஸ்து பிறந்ததை வலியுறுத்தும் விதமாக பேராயர் குழந்தை ஏசு சொரூபத்தை ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள குடிலில் வைத்தார். அப்போது அங்கிருந்த கிறிஸ்துவர்கள் அங்கு அருகில் இருந்தவர்களுக்கு

கிறிஸ்துமஸ் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டு, கைகளை குலுக்கி வாழ்த்துக்களை பரிமாறிக் கொண்டனர். இதேபோல் கடற்கரை சாலையில் உள்ள கப்ஸ் தேவாலயத்தில் தமிழ், பிரஞ்ச், ஆங்கிலம் ஆகிய 3 மொழிகளில் நடைபெற்ற சிறப்பு திருப்பலியில் ஏராளமான வெளிநாட்டினர் மற்றும் வெளிமாநில சுற்றுலா பயணிகள் கலந்து கொண்டு பிராத்தனையில் ஈடுபட்டனர். இதேபோல் வில்லியனூர் லூர்து அன்னை திருத்தலத்தில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் விழாவில் குழந்தை ஏசுவை தோளில் சுமந்தபடி ஆலயத்தைச் சுற்றி வந்து அருட்தந்தை ஆல்பர்ட் அடிகளார் தலைமையில் சிறப்பு திருப்பலியும் நடைபெற்றது. இதில் அப்பகுதியைச் சேர்ந்த ஏராளமான கிறிஸ்துவர்கள் கலந்து கொண்டு குழந்தை ஏசுவை வழிபட்டு சென்றனர்.

*சுனாமி தினம்*

காரைக்கால் மாவட்டத்தில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் சுனாமி தினம் நாளை அனுசரிக்கப்படுவதை முன்னிட்டு காரைக்கால் கடற்கரையில் அமைந்துள்ள சுனாமி நினைவிடத்தில் குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு திருமுருகன், மாவட்ட ஆட்சியர் திரு ரவிபிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் அஞ்சலி செலுத்த உள்ளனர். இந்நிகழ்ச்சியில் மீனவர் கிராம பஞ்சாயத்துதார்கள், மீனவ கூட்டுறவு சங்க நிர்வாகிகள் மற்றும் மீனவ கிராம பொது மக்கள் கலந்து கொள்ளுமாறு அத்துறையின் துணை இயக்குநர் திரு நடராஜன் விடுத்துள்ள சுற்றறிக்கையின் மூலம் அழைப்பு விடுத்துள்ளார்.

*மகளிர் கிரிக்கெட்*

இந்தியா-இலங்கை அணிகளுக்கு இடையேயான 3-ஆவது 20-20 மகளிர் கிரிக்கெட் போட்டி திருவனந்தபுரத்தில் நாளை நடைபெறுகிறது. 5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இந்தியா தற்போது 2-க்கு பூஜ்யம் என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

*அட்டல் உணவகம்*

பாரத ரத்னா அட்டல்பிகாரி வாஜ்பாயின் 101-ஆவது பிறந்த நாளை முன்னிட்டு தேசிய தலைநகர் புதுடெல்லியில் அட்டல் உணவக திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. டெல்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா மற்றும்

மத்திய அமைச்சர் திரு மனோகர் லால் ஆகியோர் இணைந்து துவக்கி வைத்த இத்திட்டத்தின் மூலம் 5 ரூபாய்க்கு ஒருவேளை உணவு வழங்கப்படும். இன்று 45 உணவகங்கள் செயல்பட தொடங்கி உள்ளதாகவும், மீதமுள்ள 55 உணவகங்கள் அடுத்த 15 நாட்களில் திறக்கப்படும் என்று டெல்லி முதலமைச்சர் தெரிவித்தார். இந்த புதிய முயற்சியின் மூலம் லட்ச கணக்கான மக்கள் பயன் அடைவார்கள் என்றும் யாரும் பசியுடன் உறங்க செல்லக் கூடாது என்ற அட்டல்பிகாரி வாஜ்பாயின் தொலை நோக்கு பார்வையை நிறைவேற்றும் வகையில் அமைந்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு மனோகர் லால் புகழாரம் சூட்டி உள்ளார்.

## மீண்டும் தலைப்புச் செய்திகள்

காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளை இந்தியா நடத்தும் போது ஒட்டு மொத்த உலகமும் நம் நாட்டை உற்று நோக்கும் என பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

பாரத ரத்னா அட்டல் பிகாரி வாஜ்பாயின் பிறந்த தினமான இன்று தேசிய நல்ஆளுமை தினமாக கொண்டாடப்படுகிறது.

முன்னாள் பிரதமர் வாஜ்பாயின் பிறந்த தினத்தை முன்னிட்டு புதுச்சேரியில் அவரது திருவுருவப் படத்திற்கு அரசு சார்பில் மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

புதுச்சேரியில் கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு அனைத்து தேவாலயங்களிலும் நடைபெற்ற சிறப்பு திருப்பலியில் திரளான கிறிஸ்துவர்கள் கலந்து கொண்டு பிராத்தனை செய்தனர்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

-----------------------------